மதுரையில் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைகளை தடுக்க வேண்டும், பள்ளி, கல்லூரிகள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் போதைப்பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த காவல்துறையின் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும், பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உடனடி நீதி, சட்ட உதவி மற்றும் மறுவாழ்வு வசதிகளை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டனப் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெற்றதில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

தேர்தல் சிம்மாசனத்திலே அமர்வதல்ல, கோட்டையிலே உட்கார்வதல்ல!

சமுதாயத்தை எழுச்சியுள்ளதாக ஆக்குவது - சுயமரியாதை உள்ளதாக ஆக்குவது தான் வெற்றி!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூன் 25-

“நாம் எதிர்பார்க்கின்ற வெற்றி தேர்தல் சிம்மாசனத்திலே அமர்வதல்ல. கோட்டையிலே உட்கார்வதல்ல. இவற்றையெல்லாம் விடப் பெரியது. சமுதாயத்தை எழுச்சியுள்ளதாக ஆக்குவது, சுய மரியாதை உள்ளதாக ஆக்குவது, தமிழன் தமிழனாக வாழ்கிறான் என்ற நிலையை அவனுக்கு எடுத்துக் காட்டுவது தான் நாம் வெற்றி பெறவேண்டிய, சாதிக்க வேண்டிய தேர்தல் என்பதை மறந்து விடாமல் நீங்கள் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்'' என்று தி.மு.க. பொதுக்குழுவில் முத்தமிழறிஞர் கலைஞர் பேசியதைச் சுட்டிக் காட்டி, திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் அண்மையில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்து, ஆட்சியில் அமராவிட்டாலும் - அது தேர்தல் அரசியலின் தனி விசித்திரம் தான் என்றாலும் - அதன் கொள்கை பலமும் - மக்களின் ஆதரவும் குறைந்து விடவில்லை என்பதை, உணர்ச்சியை ஒதுக்கி, அறிவை அளவுகோலாக்கிக் கொண்டு பார்க்கும் முதிர்ச்சி அடைந்தோர் தெளிவுற அறிவார்கள்.

கெக்கலிகளும், கிண்டல்களும், மலிவான நையாண்டிகளும் தி.மு.க. மீது தூசியாக விழுந்தாலும், அடுத்த ஒரு காற்று வரும்போது அது, தானே பறந்துவிடும். ஏகடியம் பேசியவர்கள் ஏமாற்றத்திற்கு ஆளாகும் பரிதாபமும் தொடரக்கூடும். ஆட்சி வெறும் காட்சியாக மாறக்கூடாது.

கூர்மையான ஜனநாயகக் கருவி !

தேர்தல் தோல்வி வேறு; கொள்கைத் தோல்வி வேறு. தி.மு.க.வுக்கு ஏற்பட்டது தேர்தல் தோல்வி; ஆட்சி அதற்குக் கிட்டாமற் போயிருக்கலாம்; ஆனால், அதை விட அதற்கு, ஆளுங்கட்சிக்கு அங்குசமும், கடிவாளமும் போடும் எதிர்க்கட்சி என்ற ஒரு கூர்மையான ஜனநாயகக் கருவியை மக்கள் அளிக்கத் தவறவில்லை என்பதை ஆள்வோர் மறந்துவிடக் கூடாது.

வினைத் திட்பத்தின் தன் வலிமையை விட மாற்றார் வலிமையை அறிந்து நடப்பதே களத்தில் எதிர் எதிரே சந்திக்கும் ஆளும் அணி - எதிர் அணி ஆகிய இரண்டு அணியினரும் ஆழமாகச் சிந்திக்கத்தக்கது.

கலைஞரின் வழிகாட்டும் உரை!

2.6.2008 இல், தி.மு.க. பொதுக்குழுவில் தி.மு.க. தலைவர் மானமிகு கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையை அவரது 90 ஆம் ஆண்டு பிறந்த நாளில், ‘விடுதலை’ வெளியிட்ட மலரில் பதிய வைத்துள்ளது. அப் பகுதியை, தி.மு.க. சகோதரர்கள் ஊன்றிப் படித்து, உற்சாகத்தோடு உழைக்க - கடமையாற்ற - களம் காண முயலும் இந்த சுய பரிசோதனை காலகட்டத்தில், வழிகாட்டும் கலங்கரை வெளிச்சமாக கலைஞர் அவர்களது கருத்துகள் தெள்ளிய உரையாக அமைந்துள்ளது. அதனைப் படித்துச் செயல்படுவது காலத்தின் கட்டாயம். தி.மு.க. பொறுப்பாளர்கள், தோழர்கள் ஊன்றிப் படித்துப் பயன்பெற வேண்டும்.

தி.மு.க.வின் உண்மையான வெற்றி!

“சமுதாயத்திலே நாம் பெறுகின்ற வெற்றிதான் திமுகவின் உண்மையான வெற்றி.

பேராசிரியர் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல், வாக்குகளைப் பெறுவது - வெற்றிகளைப் பெறுவது - அமைச்சர்கள் பொறுப்பை ஏற்பது - ஆட்சியிலே அமர்வது இவைகளுக்காக மாத்திரம் திமுகழகம் இல்லை. நான் இன்றைக்கு கொடுத்துள்ள பிறந்த நாள் செய்தியைப் பார்த்தால் உங்களுக்குத் தெரியும். அதில் நம்முடைய

சாதனைகளில் எதை முன்னிலைப்படுத்திச் சொல்லியிருக்கிறேன். அனைத்துச் ஜாதி மக்களும் அர்ச்சகராக சட்டம் இயற்றியது, திமுக ழக அரசு பெரியாருடைய நெஞ்சில் இருந்த முள்ளை எடுத்தோம். சமுதாயத் துறையில் அது மகத்தான வெற்றியைப் பெற்றதற்கு அடையாளம் என்றுதான் சொல்லியிருக்கிறேன். ஆகவே, சமுதாயத்திலே நாம் பெறுகின்ற வெற்றிதான் திமுகழகத்துக்குத் தேவையான உண்மையான வெற்றி என்பதை மறந்துவிடக்கூடாது.

நம்முடைய அரசியல் இயக்கங்கள் - தமிழகத்திலே எத்தனை இருந்தாலும் கூட, நாம் அவைகளிலிருந்து மாறுபட்டிருப்பதற்கு ஒரேயொரு காரணம், அவர்கள் ஆட்சியை எப்படி நடத்துவது என்பது பற்றி யோசிக்கிறார்கள். நாம் சமுதாயத்தை எப்படி வளர்ப்பது என்பதைப் பற்றி யோசிக்கிறோம். நாம் ஜாதிகளை எப்படி ஒழிப்பது என்று சிந்திக்கிறோம். அவர்கள் ஜாதிகளை எப்படி வளர்ப்பது என்று நினைக்கிறார்கள். இன்னமும் ஜாதிகளின் ஆக்கத்தால், ஆதரவால், கட்சிகளை நடத்தி விட முடியுமென்று எண்ணி, கட்சித் தலைமைக்குப் போட்டியிடுகிறவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். நீங்களும் அறிவீர்கள். ஆனால், உங்களால் வெளியே சொல்ல முடியாது. சொல்லாததற்கு காரணம் எனக்குத் தெரியும். அப்படிப்பட்ட நிலைமையிலேதான் இன்றைக்கு தமிழ் நாட்டிலே அரசியல் இருக்கிறது. எப்படி உருவான அரசியல் இது? எப்படி உருவான இயக்கம் இது? இந்த இயக்கத்தை தந்தை பெரியார் அவர்கள் துணை நின்று காக்க முற்பட்ட நேரத்திலும் சரி, இந்த இயக்கம் தொடங்கிய போதும் சரி, எத்தகைய எண்ணத்தோடு தொடங்கப்பட்டது என்பதை தயவு செய்து எண்ணிப் பாருங்கள். பழைய ஏடுகளை எடுத்துப் படித்துப் பாருங்கள். பழைய புத்தகங்களை வாங்கிப் படித்துப் பாருங்கள். பழங்காலத்து நண்பர்கள் சில பேர் இன்னமும் உயிரோடு இருப்பார்கள். அவர்களிடம் கேட்டுப் பாருங்கள். இந்த இயக்கம் சமுதாயத்திலே நமக்கு ஏற்பட்ட இழிவுகளைத் துடைத்துக் கொள்ள - ஏற்றம் பெற - நாமும் மனிதர்கள்தான் என்கிற சுய மரியாதை உணர்வு கொள்ள - பக்தி என்ற பெயரால் - பஞ்சாங்கம் என்ற பெயரால் - மூட நம்பிக்கை என்கின்ற பெயரால் - ஆண்டவன், ஆலயம் என்கின்ற பெயரால் - குருட்டு நம்பிக்கை என்கிற பெயரால் - இந்தச் சமுதாயத்திற்கு எந்த காலத்திலும் வீழ்ச்சி ஏற்பட்டு விடக் கூடாது என்பதைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தான் இந்த ஆட்சி அமைந்த காலத்திலிருந்து இதுவரையில் எத்தனையோ எதிர்ப்புகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், அத்தனையையும் பொருட்படுத்தாமல், அனைத்து எதிர்ப்புகளுக்கும் ஈடுகொடுத்து - பெண்களுக்காகப் பாடுபடுகின்ற நேரத்திலும் சரி - மகளிர் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த நேரத்திலும் சரி - அல்லது மூட நம்பிக்கைகளை வீழ்த்த வேண்டுமென்பதற்காகப் பேசுகிற நேரத்திலும் சரி - எழுதுகிற நேரத்திலும் சரி - அவற்றைக் கலைக் காட்சிகளாகத் தெரிவிக்கின்ற நேரத்திலும் சரி - எல்லா நேரத்திலும் கொள்கையை விட்டு நாம் அகன்றதில்லை. இம்மியும் நழுவியதில்லை.

நமக்கு ஒரே பெருமை ஒரே செல்வாக்கு!

நமக்கு இருக்கின்ற ஒரே பெருமை - ஒரே செல்வாக்கு - ஒரே திறமை - ஒரே சக்தி அதுதான். அதை விட்டு நாம் விலகாத வரை நம்மை யாரும் வீழ்த்த முடியாது என்ற நம்பிக்கையை நான் பெறுகிறேன். இன்றைக்கு இந்த நாற்காலி இருக்கலாம் - கோட்டையிலே நமக்காகப் போடப்படுகின்ற சிம்மாசனம் ஓராண்டு காலம், இரண்டாண்டு காலம் இருக்கலாம். எப்போதும் நிரந்தரமல்ல. அவற்றிற்காகவே இந்த இயக்கம் தொடங்கப்பட்டதல்ல. இந்த இயக்கத்திலே இருக்கின்ற நாம் சுய மரியாதை உணர்வோடு வாழ வேண்டும்.

நாம் எதிர்பார்க்கின்ற தேர்தல் சிம்மாசனத்திலே அமர்வதல்ல. கோட்டையிலே உட்கார்வதல்ல. இவற்றையெல்லாம் விடப் பெரியது. சமுதாயத்தை எழுச்சியுள்ளதாக ஆக்குவது, சுயமரியாதை உள்ளதாக ஆக்குவது, தமிழன் தமிழனாக வாழ்கிறான் என்ற நிலையை அவனுக்கு எடுத்துக் காட்டுவதுதான் நாம் வெற்றி பெறவேண்டிய, சாதிக்க வேண்டிய தேர்தல் என்பதை மறந்து விடாமல் நீங்கள் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.”

அறிஞர் அண்ணாவின் அருமையான எளிய கொள்கை விளக்கத்தினையும் இந்நேரத்தில் கவனப்படுத்திக் கொள்வது முக்கியம் என்பதைத் தாய்க்கழகம் உரிமை உறவோடு நினைவூட்டுகிறது.

“பதவி என்பது மேல் துண்டு; கொள்கை, லட்சியம் என்பது வேட்டி போன்றது!”

பல கட்சியினருக்கு இப்போது வேட்டி காணாமற் போனதே அவர்களுக்குத் தெரியாத பரிதாபமே தமிழ் நாட்டு அரசியல்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டு மக்கள்

அப்பாவைதான் தேடுகிறார்கள்!

புழுதிக்காற்றில் பறந்து கோபுரத்தில் ஒட்டிக்கொண்ட காகித முதல்வரே, உண்மைதான், தமிழ்நாட்டு மக்கள் தனது தந்தையாய் போற்றும் ஸ்டாலினை தேடுகிறார்கள்.

★★★★★★★★★★★

ஆம்...

CM அங்கிள்...

அப்பாவை தான்

தேடுகிறார்கள்

தமிழ்நாட்டு மக்கள்...

பள்ளிச் சிறுவர்களின் பசியை போக்கிய அப்பாவை தேடுகிறார்கள்....

கல்லூரி மாணவ மாணவிகளின்

கை செலவுக்கு காசு கொடுத்த அப்பாவை தேடுகிறார்கள் ...

நான் முதல்வன் என்ற பெயரில் ஊக்கத்தொகை அளித்து ஐ.ஏ.எஸ். படிக்க வைத்த அப்பாவை தேடுகிறார்கள்....

இல்லம் தேடி கல்வித் தந்து, இடை நில்லா கல்வி தந்து, அறிவு புரட்சி செய்திட்ட அப்பாவை தேடுகிறார்கள்...

வேலை தேடி ஊரு விட்டு ஊரு வந்த பெண்கள் பாதுகாப்பாய் தங்க தோழியர் விடுதி கட்டித்தந்த அப்பாவை தேடுகிறார்கள்...

விடியல் பயணம் என்ற பெயரில் மகளிர்க்கு இலவச பேருந்து தந்த அப்பாவை தேடுகிறார்கள்...

கலைஞர் உரிமைத்தொகையாய், மாதம் ஆயிரம் தந்த மாசற்ற அப்பாவை தேடுகிறார்கள் ...

தமிழ்நாடு முழுவதும் முதல்வர் படிப்பகம் என்ற பெயரில் அறிவு சார் நூலகம் தந்த அப்பாவை தேடுகிறார்கள் ...

நம்மை காக்கும் 48 .

இல்லம் தேடி மருத்துவம் தந்து, உயிர்களைக் காத்திட்ட அப்பாவை தேடுகிறார்கள் ...

எதுவும் நிரந்தரமல்ல கல்வி ஒன்றைத் தவிர என்றுரைத்த அப்பாவை தேடுகிறார்கள்...

கல்வியோடு விளையாட்டையும் இணையாய் அளித்திட்டு, போட்டிகளில் வெற்றி பெற ஊக்கத்தொகை அளித்திட்ட அப்பாவை தேடுகிறார்கள் ...

தொழிற்சாலைகள் பல கொண்டு வந்து வேலைவாய்ப்புகளைப் பெருக்கி, வருமானத்திற்கு அடித்தளமிட்ட அப்பாவை தேடுகிறார்கள் ...

போக்குவரத்து நெரிசல் தீர நாடெங்கும் மேம்பாலம் தந்த அப்பாவை தேடுகிறார்கள்....

நாசக்கார கும்பலிடம் நாடு சிக்கிக் கொண்டதால், காப்பாற்ற ஆளில்லாமல் கதறும் சிறுமிகள், அப்பாவை தேடுகிறார்கள் ...

இணையத்தின் வழியே அறிவை இழந்து நாடோடி கும்பலுக்கு வாக்களித்த காரணத்தால், நடுரோட்டிற்கு வந்திட்ட தமிழ்நாட்டை மீண்டும் மீட்டெடுக்க, தங்கள் அப்பாவை தேடுகிறார்கள்....

ஆம் தமிழ்நாட்டு மக்கள், தன் தவறை உணர்ந்து, தனது அப்பாவாய் ஸ்டாலினை தேடுகிறார்கள்...

மீண்டு வருவார்... மீண்டும் வருவார்... முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்...

ஆர்.கே.நகர், என். மருது கணேஷ்,
சட்டத்துறை துணை செயலாளர்.

பட்டூர் எஸ்.ஜபருல்லா தலைமை! எம்.ஆர்.சீனிவாசன் முன்னிலை! ஆ.கிருஷ்ணசாமி – படப்பை ஆ.மனோகரன் பங்கேற்பு!

மாங்காடு ர.ரவி - ர.ரோஜா இல்லத் திருமண வரவேற்பு!

முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வாழ்த்துரை!

காஞ்சிபுரம், ஜூன் 25 - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் மாங்காடு நகர தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ர.ரவி ர.ரோஜா ஆகியோரின் புதல்வர் ர.ராகுல்டிராவிட், மாங்காடு ஸ்ரீ சக்ரா நகர் ந.சுந்தர்ராஜன் சு.பெருந்தேவி ஆகியோரின் புதல்வி சு.காயத்ரி (எ) கமலி ஆகியோரின் திருமண வரவேற்பு விழா இன்று (25.06.2026 - வியாழக்கிழமை), மாலை 6.00 மணியளவில் கல்யாணி திருமண மண்டபம், மாங்காடு பிரதான சாலை, சென்னை 122. ல் நடைபெறுகிறது.

இம்மண விழா வரவேற்பிற்கு மாங்காடு நகரச் செயலாளர் பட்டூர் எஸ். ஜபருல்லா தலைமை வகிக்கிறார்.

மாங்காடு நகரச் செயலாளர் எம்.ஆர்.சீனிவாசன் முன்னிலை வகிக்கிறார்.

ஜி.ராமு, எம்.எஸ்.மகேந்திரன், ஜி.எம்.வில்லியம்ஸ், சுசீலாஇராதாகிருஷ்ணன், கே.ஜி.சங்கர், பி.முருகையன், ஆர்.சாரதி, பி.ராஜேந்திரன், ஜெ.கனகராஜ், ஜி.முனுசாமி, டி.வாசுதேவன், ஆர்.புஷ்பராஜ், ஆர்.குமார், பி.மதியழகன், எஸ்.வேலுமணி, எல்.பிரகாஷ், டி.நெல்சன், ஆர்.விக்னேஷ், வி.ஜெபபோஸ், பி.முனுசாமி, ஏ.தமிழ்வாணன், பி.ராக்கி, டி.ராஜ்கிளின்டன், ஆர்.சாம்வில்சன், ஆர்.உதயா, டி.மகிமைராஜ், வி.சுமன், ஏ.கார்த்திக், சே.பிரபு, எம்.பாலாஜி, அ.டில்லி, பி.திருநாவுக்கரசு ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மண விழா வரவேற்பில் முன்னாள் அமைச்சர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட ச் செயலாளர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

இதில் கழக ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் .ஆ.கிருஷ்ணசாமி, குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன், மாங்காடு நகர் மன்ற தலைவர் திருமதி. சுமதி முருகன், அ.தமிழ்மாறன், தி.க.பாஸ்கரன், ஆர்.பாஸ்கரன், எம்.ஆர்.வெங்கடேசன், ஏ.கே.அப்துல்ரஹ்மான், எம்.ஆர்.எஸ்.கதிரவன், டி.பெருமாள்ராஜ்,

சரளாவிஜயகுமார், மருத்துவர் க.ராஜேஷ், ஜி.ஞானவேல், எஸ்.நளினி, மா.அ.தம்பிதுரை, சாந்தி சம்பத், ராம்பியாரி லட்சுமணன், சரிதா ஞானவேல், க.மு.இஸ்மாயில், சி.தனசேகர், மேனகா கணபதி, சரஸ்வதி சீனிவாசன், அனுசுயா சத்தியசீலன், மோசினா அபிபுர்ரஹ்மான், யாஸ்மின் ஜபருல்லா உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

கே.சந்திப், ஆர்.சக்தி, பி.சஞ்சய் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103–வது பிறந்தநாளை யொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற மாபெரும் பட்டிமன்றம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது. இப்பட்டிமன்றத்தை கழகப் பொருளாளர் – கழக மக்களவை குழுத்தலைவர் டி.ஆர்.பாலு தொடங்கி வைத்தார். கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, புலவர் மா.இராமலிங்கம் – முனைவர்கள் சசிகுமார், துரைபாண்டி, நாகர்கோவில் மலர்விழி, பேராவூரணி நீலவேணி ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி, மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

படப்பை ஆ.மனோகரன் தலைமை! இ.மணி வரவேற்புரை! திருமுடிவாக்கம்

கிளை கழகச் செயலாளர் மு.இரகுபதி -ஆர்.கல்யாணி இல்ல மணவிழா!

முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் – டி.ஆர். பாலு எம்.பி. வாழ்த்துரை!

காஞ்சிபுரம், ஜூன் 25- திருமுடிவாக்கம் கிளை கழகச் செயலாளர் மு.இரகுபதி திருமுடிவாக்கம் ஊராட்சி மன்ற உறுப்பினர் ஆர்.கல்யாணி இரகுபதி ஆகியோரின் புதல்வர் ஆர்.லெனின், குமணன் சாவடி, டிரங் ரோடு கே.ஜெயசீலன் - ஜே.ஜெகதீஸ்வரி ஆகியோரின் புதல்வி ஜெ.ருத்ரபிரியா ஆகியோரின் மணவிழா இன்று (25.06.2026-வியாழக்கிழமை) வைதியலிங்கம் பேலஸ், குன்றத்தூரில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு நேற்று (24.6.2026 - புதன்கிழமை) நடைபெற்றது.

இத் திருமணத்திற்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.

ஒன்றிய கழக பொறுப்பாளர் திருமுடிவாக்கம் இ.மணி, ஒன்றிய கழகச் செயலாளர்ஏ.வந்தேமாதரம், சரஸ்வதி மனோகரன், உமாமகேஸ்வரி வந்தேமாதரம், இலட்சாவதி கருணாகரன் பி.வைதிலிங்கம் வரவேற்கின்றனர்.

தி.சு.இல.கணபதி, ஆர்.குணசேகரன், மு.இரகுபதி கே.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இத்திருமணத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழகப் பொருளாளர் நாடாளுமன்ற மக்களவை கழகக் குழு தலைவர் டி.ஆர்.பாலு ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இதில் முன்னாள் எம்.எல். ஏ. ஆ.கிருஷ்ணசாமி, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், த.ஜெயக்குமார் கோ.சத்தியமூர்த்தி, பட்டூர் எஸ்.ஜபருல்லா, கே.எத்திராஜ், எம்.ஆர்.சீனிவாசன், கீதா ஆனந்தன், கோல்டு டி.பிரகாஷ், மு.செல்வ மணி க.ஏழுமலை, ஆ மா.பரிமேலழகன், வாசுகி மகேஷ் .வே.அரி, மு.சுப்ரமணி, இ.விஸ்வநாதன் சத்தியமூர்த்தி, சி.பார்த்தசாரதி .மு.இராஜேந்திரன், து.சுந்தர், பொன்.ஜீவா, தி. பூங்கொடி அரசு .எஸ்.ராஜா தேசிங்கு வ.நந்தகோபால், கே.வசீகரன், எஸ்.சந்தானம், தி.க.துளசிங்கம் பா.ராஜேந்திரன் மற்றும் கே.முத்து டி.குப்பம்மாள் கந்தன் கே.மீனுகுமார் ராதிகா லட்சுமணன்,

கோகிலா பாக்கியராஜ், ஜி.ராஜகோபால், சி.ராதா கிருஷ்ணன் சி.குமார் ஏ.மேனகா ஆனந்தன் ஆர்.ஜெயசீலன் எஸ்.சிரஞ்சீவி, சி.எம்.நடராஜன், டி.பவாணி, தட்சணா ப.கண்ணபிரான், தி.ப.ராஜா, கலைச்செல்வி, கிருஷ்ணமூர்த்தி, வி.விக்டர், எஸ்.ஆதி ஜி.சுந்தரம் எம்.குமார் டி.வீரன் எம்.வினோத் பி.வி.சர்மிளா,பி.பாக்கியலட்சுமி கே.சம்பத், வி.கதிரவன் டி.இலட்சுமி தேவன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.